பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
18 08-2025 MONDAY 6.30 PM

வணக்கம்-மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் நாட்டின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிப்பார் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. துறைமுகங்கள் மசோதா நாடாளுமன்றத்தில் இன்று நிறைவேறியது.

3. மாநில அமைச்சர் திரு. ஐ. பெரியசாமிக்கு தொடர்புடைய இடங்களில் மேற்கொண்ட சோதனையின் போது, பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

4. நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம். இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் பதவிக்கான தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடியை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

இதுதொடர்பான புகைப்படங்களை சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இந்த சந்திப்பின் போது, அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு துறைகளில் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு உள்ள அனுபவம் மற்றும் நீண்டகால பொதுவாழ்வு, நாட்டின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே, மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், காங்கிரஸ், திமுக உள்ளிட்ட பல்வேறு கட்சித் தலைவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில், தமிழகத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும், கட்சிப் பாகுபாடு இன்றி திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரு.சி.பி. ராதாகிருஷ்ணனை, தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளராக அறிவித்தது தமிழகத்திற்கு கிடைத்த அங்கீகாரமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

>>>>><<<<<

துறைமுகங்கள் மசோதா-ஒப்புதல் துறைமுகங்கள் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவிற்கு மாநிலங்களவையில் இன்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மாநில கடல்சார் வாரியங்களை ஏற்படுத்துவதற்கும், அதன்மூலம் சிறு துறைமுகங்களை நிர்வகிப்பதற்கும் இது வகை செய்யும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையம் அடுத்த பத்தாண்டுகளுக்குள் ஏற்படுத்தப்படும் என்று அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இன்று மக்களவையில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு சென்ற முதலாவது இந்தியர் என்ற பெருமையை பெற்ற சுபான்ஷு சுக்லா குறித்த சிறப்பு விவாதத்தில் பங்கேற்றுப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

சுபான்ஷு சுக்லாவின் சாதனையை கண்டு நாடே பெருமிதம் கொள்வதாக அவர் தெரிவித்தார்.

விண்வெளித் துறையின் வளர்ச்சிக்காக கடந்த 11 ஆண்டுகள் படைக்கப்பட்ட சாதனைகள் குறித்து அமைச்சர் எடுத்துரைத்தார்.

இந்த விவாதத்தின் போது, எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டது ஏற்படையதல்ல என்றும் அவர் கூறினார்.

விண்வெளித்துறையில் படைக்கப்பட்ட சாதனைகளையும், விஞ்ஞானிகளையும் பாராட்ட எதிர்க்கட்சிகள் தவறிவிட்டதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

மாநில அமைச்சர் திரு. ஐ. பெரியசாமிக்கு தொடர்புடைய இடங்களில் மேற்கொண்ட சோதனையின் போது, பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

திண்டுக்கல் மற்றும் சென்னையின் பல்வேறு இடங்களில் இந்த சோதனை நடைபெற்றதாக அமலாக்கத் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த சோதனையின்போது சொத்து மற்றும் முதலீட்டிற்கான ஆவணங்களும், டிஜிட்டல் தரவுகளும் கைப்பற்றப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உள்ளாட்சிப் பணிகளை படிப்படியாக தனியார்மயமாக்குவதை திமுக அரசு கைவிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

சேலத்தில் நடைபெற்ற அக்கட்சியின் மாநில செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

அரசு சார்ந்த தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உடனடியாக குறைந்தபட்ச ஊதியத்தை வழங்க வேண்டும் என்றும் மற்றொரு தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சென்னையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மைப் பணியாளர்கள் மீது காவல்துறை

மேற்கொண்ட நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

>>>>><<<<<

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி தொடர்ந்து வலுவடைந்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இதனை கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 56 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரிநீர், தமிழக எல்லையான பிலிகுண்டுலுவை இன்று வந்தடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மொபைல் பாஸ்போர்ட் சேவை முகாம்கள் மூலம். நாளொன்றுக்கு 45 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவதாக அதற்கான இயக்குநர் திரு. கோவேந்தன் கூறியுள்ளார்.

சென்னை, அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் இன்று இந்த சேவை முகாமை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் – கோவேந்தன் 39 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

மதுரையில் உள்ள காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை மாநில அமைச்சர் திரு. சாமிநாதன் இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியின் முன்னாள் துணை முதல்வரும். கலைமாமணி விருது பெற்றவருமான ஆர்.வி. கிருஷ்ணன் இறுதிச்சடங்கு இன்று சென்னையில் நடைபெற்றது.

>>>>><<<<<

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பது குறித்து மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

வேலூர் மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்திக்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் திருமதி. சுப்புலெட்சுமி தலைமையில் நடைபெற்றது.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

மயிலாடுதுறை மாவட்டம், மன்னம்பந்தலில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளியில் புகைப்பட கண்காட்சி இன்று தொடங்கியது.

>>>>><<<<<

எர்ணாகுளத்திலிருந்து வேளாங்கண்ணிக்கு வரும் 27ஆம் தேதியும், அடுத்த மாதம் 3 மற்றும் 10ஆம் தேதிகளில் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம். இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

கஜகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் ஜுனியர் பிரிவில், Kapil தங்கப்பதக்கத்தையும், Jonathan Antony வெண்கலப்பதக்கதையும் வென்னர். இதன் குழுப்பிரிவில் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

ஆடவர் 10 மீட்டர் சீனியர் குழுப் பிரிவிலும் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

20 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Amit மற்றும் Sumit Malik அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

பல்கேரியாவின் Samokov-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 79 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Amit கஜகஸ்தானின் Yerkhan Abil-ஐ வென்றார்.

57 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Sumit Malik, அஜர்பைஜானின் Vasif Baghirov-யை வென்றார்.

>>>>><<<<<

Europe Smash Table Tennis போட்டியில் இந்தியாவின் Manav Thakkar இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஸ்வீடனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 12-10, 11-5, 5-11, 11-9 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Hiroto Shinozuka-வை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா, 5-11, 11-9, 15-13, 10-12, 11-8 என்ற செட்கணக்கில் இந்தியாவின் மனிக்கா பத்ராவை வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

>>>>><<<<<

பெரு பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி. நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>End<<<<<